
# திராவிட சினிமா

37

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்







# எதையும் தாங்கும் இதயம்: அண்ணாவின் இறுதித் திரைப்படம்!

சென்னையின் கடற்கரையில் வங்கக் கடல் தாலாட்டத் துயிலும் நம் அண்ணாவின் நினைவிடத்தில் உள்ள பலகையில் **'எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது'** என்ற வாசகத்தைக் காண முடியும்.

நமது அரசியல் சிந்தனைகளின் ஊற்றான பேராசான் அண்ணா, அனைவரையும் அரவணைத்து வழி நடத்தும் பண்புக்குப் பாத்திரமானவர். அந்தச் செயல் எளிதானதில்லை. எத்தனை காயங்களை, வலிகளைச் சுமந்து இந்த இயக்கத்தைப் பதினெட்டே ஆண்டுகளில், இந்தியாவின் முதல் மாநிலக் கட்சியாக, ஆட்சிக்கட்டிலில் அமர்த்தினார் என்பது வரலாறு.



ஆனால், அதே தலைப்புடன் 1962-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் வெளியான திரைப்படம்தான் அண்ணா அவர்கள் நேரடியாகப் பங்காற்றிய கடைசித் தமிழ்த் திரைப்படம் என்பது ஆச்சர்யத்துக்குரியது. ஆம், **'எதையும் தாங்கும் இதயம்' கொண்ட தலைவரின் நினைவைப் போற்றும் இன்னொரு மைல்கல்.**

## தேர்தல் தோல்விக்கு மருந்து

1962-ஆம் ஆண்டின் பிப்ரவரி மாத இறுதியில் இந்தியப் பொதுத்தேர்தல் நடந்து முடிவுகள் வெளிவந்தன. திராவிட முன்னேற்றக் கழகம் 50 சட்டமன்றத் தொகுதிகளிலும், ஏழு நாடாளுமன்றத் தொகுதியிலும் வெற்றிபெற்று காங்கிரஸ் கட்சியை அதிர வைத்தது. ஆனால், அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் தோல்வியுற்றார். அந்த மனநிலைக்கு ஆறுதல் அளிக்கும் வகையில், வெளியானது இந்தத் திரைப்படம்.

தோல்வியில் துவண்டு போவதில்லையே இயக்கம். தோல்வியைப் புறந்தள்ளி, அந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அண்ணா நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நான் 'திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என அறிவித்துக் கொள்வதில் பெருமை கொள்கிறேன்' என அறைகூவல் விடுத்து நாடாளுமன்றத்தையும், இந்தியத் துணைக்கண்டத்தையும் அதிர வைத்தார்.

அண்ணாவின் இறுதிப்பட நாயகனும் (எஸ்.எஸ்.ஆர்) குழந்தைப் பருவந்தொட்டு ஆதரவின்றி அல்லலுற்று, கூரைகளற்ற தெருக்களிலேயே வளர்பவன். அரைக்கால் டவுசரோடு முழுநீளத் திரைப்படத்தில் வலம் வந்த முதல் நாயகன் இவரே..!

## இரண்டு நாயகர்கள்

இல்லாமையின் இயல்பிலேயே அன்பும் இரக்கமும் நிறைவதற்கான இடஒதுக்கீடு இருப்பதை மறுப்பதற்கில்லை. மாடசாமியின் 'இல்லாமை' பொருளாதாரம் மட்டுமில்லை, அன்பும் ஆதரவும்தான். வஞ்சக தனவந்தனால் ஏமாற்றப்பட்ட தாய், பிள்ளையிடமிருந்தும் பிரிக்கப்படுகிறாள். அறிந்துகொண்டே நிராகரிக்கிறான், செல்வச் சீமானான அப்பன்.

திரைப்படத்தில் இரண்டு நாயகர்கள் (இன்னொருவர் அண்ணாவின் பிரியத்துக்குரிய ஆஸ்தான நாயகன் கே.ஆர்.ராமசாமி. செல்வச் சீமானின் நல்ல மனம் கொண்ட பிள்ளை) உண்டெனினும் திரைவெளியை ஆக்கிரமித்து நிற்கும் ஆளுமை நடிகவேள் எம்.ஆர்.ராதாதான். இறுதியில், அனைவரும் இணைவதுதான் கதைக்களம்.

## சமூக விமர்சன வசனங்கள்

அண்ணாவின் திரைப்படங்களில் காட்சிகளின் ஒவ்வொரு இழையிலும் பண்பாடு, சமூக ஏற்றத்தாழ்வு குறித்த விமர்சனங்களே நிறைந்திருக்கும். ராதா மற்றும் எஸ்.எஸ்.ஆர். உரையாடல்களில் அன்றைய சமூகப்பார்வை, அரசியல் ஆகியவை இல்லாமல் ஒற்றை வார்த்தை கூட கிடையாது. உழைத்து முன்னேற வேண்டும் என்று சொல்லும் உதவியாளரிடம் ராதா, 'உலகத்தில யாராவது உழைச்சு முன்னேறுனது உண்டா? உழைக்கலாம். ஆனால், முன்னேற முடியாது' என்கிறார். உழைப்பிற்கும் உபரிக்குமான உறவை எளிமையான வார்த்தைகளில் பேசுகிறது அண்ணாவின் வரிகள்.



நாயகனை 'அவர் ரொம்ப நல்லவரப்பா' என்கிறாள். 'ஓ... அதனாலதான் ரிக்ஷா இழுக்கிறான் போல' என வருகிறது ராதாவின் பதில். தெருவில் படுத்திருக்கும் நாயகனை எழுப்பும் காவலர் சொல்கிறார், 'தெருவுல படுக்கிறது சட்டப்படி குற்றம். எழுந்து போ' என்று, இவனோ 'எனக்கு வீடே இல்லையே' என்கிறான். காவலர் 'அதற்கு நான் என்ன செய்யுறது' என்றபடி நகர்கிறார். இன்னொரு காட்சியில் தெருத் திண்ணையொன்றில் படுக்கும்போது, ஏற்கெனவே, அங்கே வாடிக்கையாகப் படுக்கும் குடும்பத்துக்காக இடம் விட வேண்டியதாகிறது.

அநேகமான காட்சிகள் தெருவோரங்களில், சேரிகளில் மட்டுமே. எதிர்நிலையில் மாளிகை போன்ற இல்லங்கள். ராதா, மகள் தேன்மொழிக்கு அறிவுரை சொல்கிறார், 'இங்க பாரு, லேடிஸ் கிளப், டீ பார்டின்னா போ, அசிங்கமா சேரிக்கு சேவை செய்யப் போறது, அங்கே இருக்கிற ரவுடிப்பயல்களோட பேசறதெல்லாம் வேண்டாம்'.

## அண்ணாவின் 'பாஞ்சாலி சபதம்'

அண்ணாவுக்குத் தெருக்கூத்து மீது மிகுந்த ஆர்வமுண்டு என்ற செய்தி உண்டு. இந்தத் திரைப்படத்தில் தெருக்கூத்தில் துச்சாதனன் பாஞ்சாலியை துரியோதனன் சபைக்கு இழுத்துச் செல்லும் காட்சியை, கூத்தின் மொழியில், அதாவது சென்னை, வட ஆற்காடு மொழிநடையில் அமைத்திருப்பார். அண்ணா வட்டார வழக்கில் எழுதிய கூத்தின் பிரதி அபூர்வமானது என்பதில் ஐயமில்லை. அதிலும் எம்.ஆர்.ராதா, 'சவால் வீராயி' மனோரமா ஆகியோர் பங்கேற்கும் நகைச் சுவையான கூத்து கிண்டலானதும் கூட.

'என்னயக் கேட்டுக்கினா சீட்டாடுனாங்க' என வர மறுக்கிறாள் பாஞ்சாலி. 'கதிகெட்ட அண்ணியே கேட்டியா... என்னைக் கருவாட்டுத் துண்டுன்னு நெனச்சியா' இது துரியன். 'மதிகெட்ட மைத்துனனே வந்தியா... என்ன இஸ்த்துக்கினு போவ நெனச்சீயா' இது பாஞ்சாலி.

இதில் 'பாஞ்சாலியின் சபதம்' என்னவெனில், யாராலும் தன்னைக் கையைப் பிடித்து இழுத்துச் செல்ல முடியாது என்பதே. வேறுவழியின்றி, துச்சாதனன், 'அவையோர்களே, ஆம்பள நடிகனுங்கன்னா கூச்சல் போடுவீங்களே, கொஞ்சம் இந்த அண்ணியையும் கதைப்படி நடிக்கும்படி கண்டித்து அனுப்புங்கள்' என்பதே.

திராவிடச் சினிமாக்களின் அடிப்படையான பண்பே, சமூக விமர்சனக் கருத்துகளையும் அரசியலையும் தினசரி வாழ்வின் பகுதியாக்குவதுதான். அது மனித உரிமை, சுயாட்சி, மனிதாபிமானம், அரசியல் கொள்கை, பகுத்தறிவுச் சிந்தனை எதுவானாலும் 'துருத்திக் கொண்டு நிற்பவை அல்ல. இவற்றைப் பிரச்சாரங்கள் என வயிற்றிலடித்துக் கொண்டவர்கள் சித்தரித்த வாழ்வு, சனாதனத்தின் எச்சங்களாக இருந்தன.

மாற்றத்துக்கான விழைவு, தூண்டப்படாத காட்சிப்படுத்தல் விதி வசம் எனும் விபரீதத்துக்கே வழிவகுக்கும். மறுபுறம் ஆர்ப்பரித்துக் கூட்டம் கூட்டி, தீவட்டி ஏந்திவிட்டால், மாற்றம் விளைந்து விடுமென்ற முதிரா சிந்தனை உவப்பானதல்ல. திராவிடம், வெகுமக்கள் இயக்கம் என்பதால் 'எல்லாம் விதிவசம்' எனும் தோல்வி மனப்பான்மையையோ, எதிர்நிலையில், 'வன்முறையே மாற்றத்திற்கான வழி' என்பதையோ ஒரு போதும் ஏற்ற இயக்கமன்று. எதையும் தாங்குவோம், ஆனால் அடுத்த நகர்வை ஒருபோதும் கைவிட மாட்டோம். அதுதான் திராவிடம். அதுதான் அண்ணாவின் அரசியல் சித்தாந்தம்.

...படம் விரியும்

## எத்தனை சிறிய இடம்..!

பாராளுமன்றத்தில் கண்ணீர்ப்புகை குண்டு வீசிய நிகழ்வைப் பற்றி விவாதம் நடத்தத் திராணியற்ற பா.ஜ.க. அரசு, அது தொடர்பாக, கேள்வி கேட்ட எம்.பிக்களை எல்லாம் இடைநீக்கம் செய்தது.

அந்தப் பிரச்சினை இப்போது பூதாகரமாக எழும்ப, இப்போது துணை ஜனாதிபதியைக் கிண்டல் செய்கிறார்கள் என்று பிரச்சினையைத் திசை மாற்றுகிறது.

அடுத்த சில நாட்களில், பா.ஜ.க. அரசு கொண்டு வந்த சில மசோதாக்கள் பற்றிக் கேள்வி கேட்ட எதிர்க் கட்சி எம்.பிக்கள் சிலரையும் இடைநீக்கம் செய்திருக்கிறது.

தந்தை பெரியாரின் கருத்துகளைச் சொன்னால், இடைநீக்கம், கேள்வி கேட்டால் இடைநீக்கம் எனத் தொட்டதற்கு எல்லாம் எதிர்க்கட்சி எம்.பிக்களை இடைநீக்கம் செய்துவிட்டு, பாராளுமன்றக் கூட்டத் தொடரை எப்படியாவது நடத்தி முடித்துவிட முயற்சிக்கிறது பா.ஜ.க.

இவை எல்லாமே பாராளுமன்றம் ஒரு சர்க்கஸ் கூடமாக மாறிவிட்டிருக்கிறது என்பதையே காட்டுகின்றன. பழைய பாராளுமன்றத்தில் போதிய இட வசதி இல்லை என்று, புதிய பாராளுமன்றம் கட்டப்பட்டது. இங்கு இட வசதி நிறைய இருக்கிறது. ஆனால், ஆட்சியில் இருப்ப வர்களின் அறிவும் மனமும் தான் சுருங்கி இருக்கின்றன.

## :ப்ளாஷ்பேக்





பொன்மலை குமாரசாமி

### ரயில் நிலையத்தில் பொன்னாடை!

1992-ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காக கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள், நீலகிரி விரைவு ரயிலில் கோவை ரயில் நிலையத்துக்கு வருகை தந்தார். காலை 4 மணிக்கு ரயில் நிலையத்துக்கு வந்த, அவரை வரவேற்க கிணத்துக்கடவிலிருந்து அதிகாலை 2 மணிக்கே கிளம்பி, நிலையத்தை அடைந்தோம். பேராசிரியர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து மகிழ்ந்த நிகழ்ச்சி, என் வாழ்க்கையில் மறக்க முடியாத தருணம். அப்போது பொங்கலூர் நா.பழனிசாமி, கோவை ராமநாதன் ஆகியோர் உடனிருந்தார்கள்.

**-பொன்மலை குமாரசாமி,**
**முன்னாள் மாவட்டப் பிரதிநிதி,**
**கோவை தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### அண்ணாவின் மடல்!

**1955-ஆம் ஆண்டு மே 8-ஆம் தேதி முதல் பேரறிஞர் அண்ணா 'திராவிட நாடு' ஏட்டில் 'தம்பிக்கு' என்ற தலைப்பில் மடல்களை எழுதி வந்தார். அடுத்த 15 ஆண்டுகளில் மொத்தம் 290 கடிதங்களை அண்ணா எழுதினார். அதேபோல அவர் 'ஹோம்லேண்ட்' மற்றும் 'ஹோம் ரூல்' ஆங்கில வார ஏடுகளில் 1957 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலத்திலும் அந்த மடல்களை எழுதினார். தேர்தல் பாதையில் அடைந்த முன்னேற்றம், ஆட்சியில் அமர்ந்தது என தி.மு.க வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடிகளாக அந்தக் கடிதங்கள் திகழ்கின்றன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

336




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.